தேதி.01.07.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

MCOP. No.15/2019 திரு.சிவக்குமார், த/பெ.காளிமுத்து எ.சா. 1

<u>எ.சா.1: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

2, 3 எதிர்மனுதாரர்கள் என்னுடைய உயர் அதிகாரிகள் என்றால் சரிதான். இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனம் வனச்சரகத்தை சார்ந்தது என்றால் சரிதான். நான் என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஓட்டுநர் உரிமம் தாக்கல்செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டவுடன் காயம்பட்ட குழந்தையை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை. விபத்து நடந்ததையும், விபத்தில் குழந்தைக்கு காயம்பட்டதையும் நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை நான் தான் ஓட்டினேன் என்றால் சரிதான். விபத்தானது என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் ஏற்பட்டது என்றும், குழந்தையின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 ஆன குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பானது இவ்வழக்கை

கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனவே காயம்பட்ட குழந்தைக்கு நாங்கள் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.